**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No.133/2022
Prosecution side witness for P.W.24

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. விஜய் ஆனந்த் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.08.2026**
A3 present. A1, A2, A4, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்டுடன்ஸ் ஜெராக்ஸ் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன். கடந்த 2022 ஆம் வருடம் மாலை சுமார் 5.30 மணியளவில் இரண்டு போலீசார்கள் வந்து ஒரு வழக்கு சம்மந்தமாக எனது கடையில் சிசிடிவி பதிவுகளை பார்வையிட கேட்டார்கள். நான் அனுமதி அளித்ததன்பேரில் அவர்கள் சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டு பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து கொண்டார்கள். மேற்படி இரண்டு நபர்களும் சீருடையில் இல்லை. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

பென்டிரைவில் பதிவிறக்கம் செய்தது சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்தவித சிசிடிவி பதிவுகளையும் எடுக்கவில்லை என்றாலும், போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் உண்மைக்குபுறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M Digitally signed by BREETHA M

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No.133/2022
Prosecution side witness for P.W.25

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. மாரிமுத்து | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.08.2026**
A3 present. A1, A2, A4, A5, A7 are absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள ஆராய்ச்சிபட்டி கிராமத்தில் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2022 ஆம் வருடம் டிஜிட்டல் பேனர் பிளக்ஸ் கடையில் வேலை செய்து வந்தேன். தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் கேன்டின் வைத்துள்ளேன். எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 25.03.2022 ஆம் தேதி நான் வேலை முடிந்து எனது பைக்கில் எங்கள் ஊருக்கு சென்றுகொண்டிருக்கும்போது என்னை முந்திக்கொண்டு TN76 AH 3057 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற பேசன்புரோ பைக்கில் இருவர் வேகமாக சின்னதிருவண்ணாமலை மலை காட்டுப்பகுதிக்குள்

சென்றார்கள் என்றும், அந்த பைக்கை ஓட்டிக்கொண்டு சென்றவர் ஹெல்மெட் போட்டிருந்தார் என்றும், இருவரும் வேற்று ஆட்கள் மாதிரி தெரிந்தது என்றும், உடனே நான் பைக்கை ஓரமாக நிறுத்திவிட்டு பார்த்தபோது அந்த பைக்கில் சென்ற நபர்கள் பழைய கல்குவாரி பக்கம் பைக்கை நிறுத்திவிட்டு இருவரும் வேகமாக அவர்கள் போட்டிருந்த ஆடைகளை கழற்றி போட்டு தீவைத்து எரித்தார்கள் என்றும், அதன்பின்னர் கல்குவாரி கிடங்கில் இருவரும் குளித்துவிட்டு வேறு ஆடைகளை போட்டுக்கொண்டு இருந்தார்கள் என்றும், நான் உடனே அவர்களுக்கு பயந்து எனது பைக்கை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், அதன்பின்னர் இன்று 10.04.2022 ஆம் தேதி கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய ஆய்வாளராகிய தாங்கள் எங்கள் ஏரியாவிற்கு வந்து TN76 AH 3057 என்ற பதிவெண் கொண்ட பைக்கில் வந்தவர்களை பார்த்தீர்களா என்று விசாரித்துக்கொண்டிருக்கும்போது நான் பார்த்த விவரத்தை சொன்னேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M Digitally signed by BREETHA M

II Additional District & Sessions Judge,
Thoothukudi.